3. கவன ஈர்ப்பு.

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சிவந்திபுரத்தில் ஊராட்சி வழங்கும் குடிநீரால் மக்களுக்கு ஏற்படும் கேடுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கே. ரவி அருணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வொன்றை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.... (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. நஞ்சப்பன். ஆளாளுக்குப் பேச வேண்டுமா ? (குறுக்கீடு) இப்போது ஒன்றும் நிலைமைகளை அறிவிக்கவில்லை. அவர்கள் ஓர் அறிவிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு). திரு. நஞ்சப்பன் அவர்கள் பேசியது எதுவும் பதிவாகாது. உட்காருவீர்கள் என்று நம்புகிறேன். திரு. கே. ரவி அருணன், நீங்கள் பேசுங்கள்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சிவந்திபுரம் ஊராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீர், பொது மக்களுக்கு சுகாதாரக் கேட்டை விளைவிப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட விவர அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்:

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

1981 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் மூலம் சிவந்திபுரம் ஊராட்சிக்கு தற்பொழுது நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கான நீராதாரம் தாமிரபரணி ஆறு. ஆற்றின் மேலோடும் நீரை சுத்திகரித்து சிவந்திபுரம் ஊராட்சிக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் தலைமை இடத்திற்கு அருகில் 'மதுரா கோட்ஸ்' ஆலை இருப்பதால், இங்கிருந்து விடப்படும் கழிவு சாயங்கள் ஆற்று நீருடன் கலந்து, மார்ச் முதல் மே மாதம் வரையில் (விவசாயத்திற்காக நீர் விடாத காலத்தில்) எடுக்கப்படும் நீரானது சுத்திகரிக்கப்பட்டாலும் மாற்று நிறத்தோடே காணப்படுகிறது. இத்தன்மையைப் போக்க தற்போதுள்ள நீராதாரத்திற்கு 7.5 கி. மீட்டர்

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி] [1990 ஏப்ரல் 24

ஆற்றின் மேல் பகுதியில் ஒரு தலைமையிடம் ஏற்படுத்தி அந் நீரை ஊராட்சிக்குக் கொண்டுவந்து விநியோகிக்க சுமார் ரூ. 65 இலட்சம் மதிப்பீட்டில் உத்தேச மதிப்பீடு என்று மாவட்ட ஆட்சியரிடம் தரப்பட்டுள்ளது. அவர் இத்திட்டத்திற்கு ஆகும் செலவிற்கான நிதியை, மேற்சொன்ன அம்பாசமுத்திரத்திலுள்ள 'மதுரா கோட்ஸ்' ஆலை நிர்வாகத்திடம் பெற முயற்சிக்கிறார். நிதி சம்பந்தமாக முடிவான அறிக்கை பெற்றவுடன், இம்மாற்றுத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிவந்திபுரம் கிராமத்தில் ஏறத்தாழ 12,000 பொதுமக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் தாமிரபரணி நதிக் கரையின் ஓரத்தில் இருந்துகொண்டு குடிநீருக்காக கண்ணீர் வடிக்கின்ற சூழ்நிலை நிலவி வருகிறது. கடந்த ஆண்டு இதே பிரச்சினையை நான் தெரிவித்தபோது, அங்கே உள்ள மதுரா கோட்ஸ் நிறுவனம் 300 ஏக்கர் நிலம் வாங்கவேண்டுமென்றும், அதிலே கழிவு நீரை விடவேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அந்த முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கொடுத்துள்ள விவர அறிக்கையில், மதுரா கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து 65 லட்ச ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற முயற்சிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் இதிலே எடுத்த முயற்சி என்ன? அந்த நிதி ஆதாரத்தை...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் ஓர் அறிக்கையையே கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் ....

திரு. கே. ரவி அருணன்: அந்த நிதி ஆதாரத்தை மதுரா கோட்ஸ் நிறுவனம் தர மறுத்தால், அரசே இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீர் ஆதாரமாக இருக்கிற அந்த இடத்திலேயிருந்து தாமிரபரணி ஆற்றிலிருந்து 7.5 கிலோ மீட்டர் மேற்குப் பகுதியிலிருந்து குடிநீர் கொண்டுவர ஏற்பாடு செய்து அதற்கான திட்டமொன்று தீட்டப்பட்டிருக்கிறது. அதற்கான நிதி ஆதாரத்தை அங்கேயுள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் வந்தபிறகு, மேற்படி நிதி ஆதாரங்களை எப்படி அந்த இடத்திற்குக் கொடுப்பது என்பதைப்பற்றி அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு குடிநீராக வழங்கப்படும் ஆற்று நீரை மாசு படுத்துகிற மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் மீது மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

10-55 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்ப் பிரச்சினை தொழிற்சாலைகள் வளரவேண்டும் என்பதற்கு இடையூறாக இருக்கக்கூடாது. ஆகவேதான் அங்கே ஆகிற செலவை அந்த மதுரா கோட்ஸ் நிறுவனமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அந்த நிறுவனத்தின் மீது அரசு விதியினை விதித்து இருக்கிறது.

(ஆ) திருச்சி மாவட்டத்தில் சில கூட்டுறவுச் சங்கங்களின் அலுவலர்கள் விசைத்தறி உருப்படிகளை கைத்தறி உருப்படிகளாக விற்பனை செய்த மோசடிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பாப்பா உமாநாத், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி மாவட்டத்தில் மண்டலக் கைத்தறிக் கொள்முதல் அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் துணையோடு விசைத் தறிகளில் உற்பத்தியாகும் வேட்டிகளைக் குறைந்த விலைக்கு வாங்கி, கைத்தறி ரகம் என்று முத்திரை குத்தி அதிக விலைக்கு விற்றதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், உதயநத்தம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கைத்தறி வேஷ்டிகளுக்குப் பதிலாக 200 விசைத்தறி வேஷ்டிகள் கோ-ஆப்டெக்ஸ் சேமிப்புக் கிடங்கிற்கு 29-3-1990 அன்று அனுப்பப்படுவதாக வந்த புகார்களின் அடிப்படையில் மேற்படி சங்கத்தின் தனி அலுவலர் 31-3-1990 அன்று விசாரணை